தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 1, பவ — திருவள்ளுவர் ஆண்டு 2026

1995, மார்ச் 15, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு"

குறை கூறுவோரின் சொற்களைச் செவி கைக்கும் நிலையிலும் பொறுக்கின்ற பண்புடைய அரசனது குடை நிழலில் உலகம் தங்கும்.

1. இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. துரை கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 12-1-1995 ஆம் நாளன்று மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. துரை கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 1985ஆம் ஆண்டு முதல் 1988ஆம் ஆண்டு வரை தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறந்த முறையில் பணியாற்றி உள்ளார். அன்னாரது மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று 2 மணித்துளிகள் அமைதி காத்தனர்)

2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 1, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு நிதி அமைச்சர்.

1—

சத்தியமூர்த்தி நெசவாளர் காலனியில் புதிய வாக்குச்சாவடி அமைத்தல்

*20400-டாக்டர் எஸ். சுந்தரராஜ்:

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, அண்டக்குடி வாக்குச்சாவடியில் சத்தியமூர்த்தி நெசவாளர் காலனி, பர்மா காலனி (பொன்னையாபுரம் அருகில்), பாம்புவிழுந்தான் ஆகிய பகுதிகளைப் பிரித்து தனியாகப் புதிய வாக்குச்சாவடி சத்தியமூர்த்தி நெசவாளர் காலனியில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இராமநாதபுரம் மாவட்டம், 200 பரமக்குடி (தனி) சட்டமன்றத் தொகுதியில் தற்போதுள்ள 47 ஆம் எண்ணுள்ள வாக்குச்சாவடி, 66 (எல்லா வாக்காளர்களும்) மற்றும் 67 (எல்லா வாக்காளர்களும்) என இரு வாக்குச்சாவடிகளாகப் பிரிக்கப்பட்டு, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள வண்ணமே 67 (எல்லா வாக்களர்களும்) எண்ணுள்ள வாக்குச்சாவடி சத்தியமூர்த்தி காலனியில் அமைந்துள்ள சௌராஷ்டிரா துவக்கப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ளது.